# புறநானூற்றுப் பாடல்களில் உணவுக் கலாச்சாரம்

# Food Culture in The Songs of the Purananuru

***முனைவர் த. சந்திரகுமார்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
(தன்னாட்சி), சிவகாசி

**Dr. T. Chandrakumar**
*Assistant Professor, Department of Tamil*
*Ayya Nadar Janaki Ammal College (Autonomous)*
*Sivakasi*

## ஆய்வுச் சுருக்கம்

*இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட, தமிழ் செவ்வியல் இலக்கியங்களில் நம் முன்னோர்களின் வாழ்வியல் செய்திகள் அத்தனையும் பொதிந்து காணக் கிடைக்கின்றன. சமூக வாழ்க்கையின் உறுப்புகளாகிய குடும்பம், அரசியல், பொருளாதாரம், கல்வி, இயற்கை, அறிவியல் என்று மனிதன் இயங்குவதற்குரிய ஆற்றல்களைத் தருகின்ற உணவியல் குறித்தும் நிறைய செய்திகளைக் காண முடிகிறது. சங்க இலக்கியங்களை அகம், புறம் என்று பாகுபடுத்தும் இலக்கிய உலகிற்கு அகம், புறம் எனும் இரண்டிற்கும் பொதுவான ஒன்றாக உணவுக் கலாச்சாரம் உள்ளதைக் காணலாம். உணவு என்பது உடல் இயங்க சக்தி தருவது மட்டுமன்றி இந்த உலகம் இயங்கவும் உதவுகிறது. கலாச்சாரம் என்பது அறிவாற்றல்; வாழ்வியல் வழிமுறைகள்; சமூக கட்டமைப்பு என்பவற்றைச் சுட்டி மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள், கருவிகள் ஆகியவையும் கலாச்சாரத்துக்குள் அடக்கம் ஆகிறது. ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்பது உணவுக் கலாச்சாரத்தின் உச்சம் எனலாம்.*

*மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே*

*என்று மணிமேகலைக் காப்பியம் உணவின் சிறப்பு பற்றிப் பேசுகின்றது. உணவு இன்றியமையாதது*

## Abstract

*Tamil classical literature, which dates back to 2,000 years, contains all the details of the life of our forefathers. There is also a lot of news about the elements of social life such as family, politics, economics, education, nature, science, etc., and dietetics that give man the capacity to function. In the literary world, which divides sangam literature into internal and external, it can be seen that food culture is common to both the inner and the outer. Food not only gives the body the energy to function but also helps the world to function. Culture is cognition; methods of living; Language, food, music, religious beliefs, professional choices and tools are also included within the culture, pointing to social structure. Manimekalai epic and Valluvar also mentions that the one who eats in moderation is one who lives in good health, 'there is no harm to life' (Kural-945). One of the classical literatures, the Etiquette speaks at length about the ways in which human beings eat food. Though there are 400 songs on the outside, veeram remains its main*

*தான் ஆனாலும் அதனையும் அளவுடன் உண்டால் உயிர் வாழ்வதற்குத் தொல்லை எதுவுமில்லை என்கிறார் வள்ளுவர்.*

***“மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்***
***ஊறுபாடு இல்லை உயிர்க்கு”***

***(குறள்-945)***

*அளவோடு உண்பவர் நலமுடன் வாழ்பவர் என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். செவ்வியல் இலக்கியங்களுள் ஒன்றான ஆசாரக் கோவை மனிதர்கள் உணவு உண்ணும் முறைகள் பற்றி விரிவாகப் பேசுகின்றது. புறம் பற்றிய நானூறு பாடல்கள் இருப்பினும் வீரமே அதன் பெரும் பேசு பொருளாக உள்ளது. வீரம் குறித்துப் பேசும் புறநானூற்றில் உணவுக் கலாச்சாரம் குறித்தும் ஏராளமான பதிவுகள் உள்ளன. உணவைப்பகிர்ந்து உண்ணுதல் என்னும் உயரிய கலாச்சாரம் குறித்துப் பேசும் புறநானூற்றுப் பாடல் வழி காணலாகும் உணவுக் கலாச்சாரம் குறித்து ஆய்வதாக இவ்ஆய்வு அமைகின்றது.*

***முக்கியச்சொற்கள்:*** *இலக்கியங்கள், உணவுக் கலாச்சாரம், புறநானூற்றுப் பாடல்கள்.*

*theme. There are also numerous records of food culture in the Purananuru, which speaks of valour. This study is a study of food culture, which speaks of the higher culture of sharing and eating food.*

***Keywords****: Literature, Food Culture, Purananooru Songs*

**Citation**

Chandrakumar, T. “Food Culture in The Songs of the Purananuru.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 52–61.

**முன்னுரை**

*காதலும் வீரமும் கைகோர்த்து உறவாடும் சங்கத் தமிழரின் வரலாற்றுப் பெட்டகம் புறநானூறு, தன்னுணர்ச்சிப் பாடல்கள் என்று போற்றப்படும் புறநானூற்றில் பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வும் வரலாறும் காணக் கிடைக்கின்றன. நமது முன்னோர்களின் வீரத்தைப் பறை சாற்றும் புறநானூற்றில் வாழ்விற்குத் தேவையான வீரவுணர்வைத் தாய்ப்பாலுடன் சேர்த்து ஊட்டிய மறக்குடி மங்கையரின் மாண்பும் காணக் கிடைக்கிறது. வீரத்திற்கும் அறத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்துப்பாடும் புறநானூற்றில் உணவுப் பண்பாடு குறித்த செய்திகளைப் பாடல்களில் காண முடிகிறது. புறநானூற்றுப் பாடல்களில் காணலாகும் உணவுக் கலாச்சாரம் குறித்து ஆய்வதாக இவ்ஆய்வு அமைகின்றது.*

**பெருஞ்சோறளித்த சேரன்**

*சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப் பாடும் முரஞ்சியூர் முடிநாகனார் சேரன் போரிடும் இரு திறத்து மன்னர் படைக்கும் பெருஞ்சோறு படைத்தான் என்று பாடுகிறார்.*

***ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒழியப்***
***பெரும் சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய் (புறம். பாடல்:2)***

*மன்னன் தன் நாட்டுப் படைக்கு மட்டுமல்லாது எதிரி நாட்டு வீரருக்கும் குறைவில்லாது உணவு வழங்கியமையினால் இவன் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்றழைக்கப்படுகிறான்.*

**காலை இளங்கதிர் போன்றவன்**

*சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் பாடும் பரணர் உன் கோபத்துக்கு ஆளாகி உன்னோடு போரிட்டு பகை கொள்ளும் படை மன்னர் நாடு உண்ண உணவின்றி வாடும் தாயில்லாப் பிள்ளையைப் போல் ஓயாத துன்பத்தில் துடிக்கும் என்கிறார்.*

***தாயில் தூவாக் குழவி போல***
***ஓவாது கூஉறின் உடற்றியோர் நாடே (புறம். பாடல்:4)***

**நல்லது செய்யும் வல்லவன் சென்னி**

*நெய்தலங்கானில் பிறந்த இளஞ்சேட் சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் பாடுகிறார், சென்னி உண்ண உண்ண தெவிட்டாத மணமிக்க சுவையுணவை விருந்தாய் வருவோர்க்கெல்லாம் வாரி வழங்குகின்ற, குறையில்லாத் தோள்களையுடையவன். அத்தோள்களை அவன் மனைவியர் தழுவுதல் அன்றி பகையரசர் தழுவ முடியாது.*

***அமிழ்து அட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்***
***வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை (புறம். பாடல்:10)***

*இளஞ்சேட் சென்னி குறைவில்லாது நிறைவான உணவு வழங்கக் கூடியவன் எனப் பாடுகிறார்.*

**நீரைத் தேக்கு, நில வளம் காக்க!**

*நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் என்னும் புலவர் பாடுகிறார். உன் ஆசை நிறைவேறுவதற்கான வழிகளைச் சொல்கிறேன் கேட்பாயாக! நீரில்லாமல் வாழ முடியாத இவ்வுடலுக்கு உணவு கொடுத்தவர்கள் தான் உயிர் கொடுத்தவர் ஆவர். எனவே உடலுக்கு உயிர் போன்றதாகும் உணவு. உணவெனப்படுவது நிலத்தோடு சேர்ந்த நீர் ஆகும். அந்நீரையும் நிலத்தையும் ஒன்று சேர்த்து உணவுப் பொருட்களை விளைவித்தவர்கள் தான் உயிரையும் உடலையும் வாழவைப்பவர் என்று பாடுகிறார்.*

***நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்***
***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே***
***உண்டி முதற்றே உணவின் பிண்டம்***
***உணவெனப் படுவது நிலத்தொடு நீரே*** ***(புறம். பாடல்:18)***

*என்று உணவு என்பதற்கு விளக்கம் தருகிறார்.*

**மன்னன் வாழ்வு மக்களின் வாழ்வு**

*சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரன் இரும்பொறையின் புகழினைப் பாடுகிறார் குறுங்கோழியூர்க் கிழார். பகையரசர் மண்ணைக் கவர்ந்தாளும் அரசே! நின்னுடைய நாட்டிலே கருவுற்ற மகளிர் வேட்கை மிகுதியால் உண்ண விரும்புவதல்லாமல், பகைவர் உண்ண நினைக்காத பெரும் நிலப்பரப்புடையவன் என்கிறார்.*

***பிறர்மண் உண்ணும் செம்மல்! நின் நாட்டு***
***வயவுறு மகளிர் வேட்டு உணின் அல்லது***
***பகைவர் உண்ணா அரு மண்ணினையே*** ***(புறம். பாடல்:20)***

*கருவுற்ற பெண்கள் மசக்கையால் மண் தின்ன விருப்புவர். ஆனால் உன் பகைவர் உன் நாட்டு மண் மீது ஆசை கொள்ளார். ஏனெனில் பகைவர் மண் ஆசை கொண்டால் அவர்களை அழித்து விடும் மன்னன் இவன் என்றும் மசக்கைப் பெண்களின் உணவுப் பண்பாடு குறித்தும் பேசுகிறார் புலவர்.*

**அன்பும் அருளும் உடையவன்**

*சோழன் நலங்கிள்ளியைப் பாடும் முதுகண்ணன் சாத்தனார் நிலவுலகத் தேவர்கள் ஆனாலும் மற்றவர்கள் ஆனாலும் இல்லை என்று வருபவர்களின் பசித்த வயிற்றைப் பார்த்து, அவர்களுக்கு வேண்டியதைத் தந்துதவும் அன்பும் அருளும் உடையவன் என்று பாடுகிறார்.*

***வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்***
***வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி***
***அருள் வல்லை ஆகுமதி:*** ***(புறம்.பாடல்:27)***

*சோழன் நலங்கிள்ளி இரப்பவர்க்குத் தன் இன்னுயிரும் கொடுக்கும் பண்பாளன் என்கிறார்.*

**சோழன் நலங்கிள்ளி**

*நாட்டு மக்களின் உண் கலத்தை நிறைக்க அவர்களை என்றும் குறைவின்றி வைத்திருக்க*

*நீண்ட நெடுங்கொடிகள் அசைந்தாடும் வஞ்சி மாநகரையே தரக்கூடியவன் சோழன் நலங்கிள்ளி என்கிறார் கோவூர்க்கிழார்.*

***கடும்பின் அடுகலம் நிறையாக நெடுங்கொடிப்***
***பூவா வஞ்சியுந் தருகுவன் ஒன்றோ (புறம். பாடல் : 32)***

*இரப்போர்க்கு எதையும் கொடுக்கும் ஈகைக் குணம் மிக்கவன் சோழன் நலங்கிள்ளி. தன் நாட்டு மக்களின் பசியைப் போக்க தன் நகரையும் தரக்கூடிய கொடையாளன் நலங்கிள்ளி என்கிறார்.*

**பரிசிலாய் யானையையே தந்த தானைத் தலைவன்**

*சோழிய ஏனாதி திருக்குட்டுவனை எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் புகழ்ந்து பாடுகிறார். இவன் வள்ளல் குணம் மிக்கவன் என்றாலும் கற்றறிந்த புலவர் பெருமக்களே! இவனிடம் பாடிப் பரிசல் பெறச் செல்வதை மறந்து விடுங்கள். ஏனெனில் நான் ஒரு சமயம் என் தடாரிப் பறையை ஒலி செய்ய புகழ் மிக்க வஞ்சித்துறைப் பாட்டொன்றைப் பாடிச் சென்றேன். அதைக் கேட்டு அவன் என்னைத் தழுவி புலால் வாடை கூசும் தந்தக் கொம்புடைய யானையைப் பரிசாகத் தந்தான். அதனைக் கண்டுபயந்த நான் அவனிடம் திருப்பித்தர, வேறொரு யானையையும் பரிசாகத் தந்தான். அவனிடம் சென்றால் வேண்டிய அளவு பரிசுகள் தந்து என்னை மகிழ்விப்பான் எனப்பாடுகிறார்.*

***வெஞ்சின வேழம் நல்கினன் அஞ்சி***
***யான் அது பெயர்த்தனென் ஆகத் தான் அது***
***சிறிது என உணர்ந்தமை நாணிப்பிறிதும் ஓர்***
***பெருங்களிறு நல்கியோனே அதற்கொண்டு***
***இரும்பேர் ஒக்கல் பெரும்புலம்பு உறினும்***
***துன்னரும் பரிசி தரும் (புறம். பாடல்:394)***

*மன்னனைப் பாடிப் புலவர்கள் செல்கிறார்கள் என்றால், அவர்களுக்கு உணவுப் பஞ்சம் என்று பொருள். உணவுப் பஞ்சம் தீர்கப் பரிசு தரும் மன்னன் யானையைப் பரிசாகத் தருகிறான் என்றால் அந்த யானையைப் பராமரிக்கத் தேவையான உணவு கிடைக்கும் விளை நிலங்களையும் தருவான் என்பது பொருள்.*

**பழஞ்சோறு**

*சோழ நாட்டுப் பிடவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தனின் கொடை குணத்தைப் பாடும் மதுரை நக்கீரர், மருத நிலத்தில் உழவு செய்த உழவர்கள் தங்கள் உழவு மாடுகளை முல்லை நிலத்திலே மேய விட்டு விட்டு, குறுமுயல்களின் வெந்து குழைந்த சூடான இறைச்சியையும் நீண்ட வாளைமீன் கொண்டு செய்த அவியலையும் பழஞ்சோற்றுடன் உண்பர் என்கிறார்.*

***மென்புலத்து வயல் உழவர்***
***வன்புலத்துப் பகடுவிட்டுக்***
***குறுமுயலின குழைச் சூட்டோடு***
***நெடுவாளைப் பல்உவியல்***
***பழஞ்சோற்றுப் புக அருந்தி (புறம். பாடல் : 395)***

*சங்க காலத்தில் நம் முன்னோர்கள் உணவுப் பண்பாடு என்று இப்பாடல் வழி நன்கு புலப்படுகிறது. மருத நிலத்தில் உழவு வேலை செய்யும் உழவர்கள் கடினமான உடல் உழைப்பிற்குப் பிறகு முல்லை நிலத்தில் வாழும் முயலை உணவாக உட்கொள்கின்றனர். முயல் உணவு என்பது நாம் உண்ணும் முயல் கறி எடையில் முக்கால் பங்கு நம் உடம்பில் ஒட்டும் என்பது ஒரு பழமொழி. கடின உழைப்பும் நல்ல உணவும் கொண்டு நம் முன்னோர்கள் வாழ்ந்தனர் என்பது இதன் வழி தெரிய வருகிறது.*

**நெய் ஊற்றிய சோறு**

*வாட்டாற்று எழினியாதன் பெருமைகளில் எதைச் சொல்வது எதை விடுவது என்று மாங்குடி மருதனார் பாடுகிறார். கொழுத்த சுவையான சூட்டோடு இறைச்சி உணவு தந்தான்; கொம்புத் தேன் தந்தான்; குறுமுயலின் தசையோடு கலந்து தந்த நெய்யூற்றிய சோற்றுணவு தந்தான். திறந்த பின் மூட மறந்து விட்டு வைத்த உணவுப் பண்டங்கள் கொடுத்து, வேண்டும் அளவு எடுத்துக் கொள்ள ஏதுவாக வைத்த தின்பண்டங்கள் தந்தான். மீண்டும் மீண்டும் உண்க உண்க என்று கொடுத்து உபசரித்தான்.*

***கொழுந்தடிய சூடு என்கோ?***
***வளநனையின் மட்டு என்கோ?***
***குறுமுயலின் நிணம்பெய்தந்த***
***நறு நெய்ய சோறு என்கோ?***
***திறந்து மறந்து கூட்டு முதல்***
***முகந்து கொள்ளும் உணவுஎன்கோ?*** ***(புறம். பாடல் : 396)***

*நல்ல உணவினை உண்பவர் விரும்பி உண்ணும் உணவினை மேலும் உண்க என்று உண்ணச் செய்யும் உணவுப் பண்பாடு குறித்து இப்பாடல் பேசுகிறது.*

**வளவன் இருக்கும் வரை வாழ்வில் கவலையில்லை**

*சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை எருக்காட்டூர்த் தாயன் கண்ணனார் பாடிய பாடல் வழி கிள்ளிவளவனின் கொடைப் பண்பை உணர்த்துகிறார். என் தடாரிப் பறை கேட்டவுடன் இவன் நம்மை மறவாது தேடி வந்த பரிசிலனென்று மகிழ்ந்து, நெய் நிறைய ஊற்றித் தாளித்த சூடான இறைச்சி உணவும் மணிகள் பதித்த பொற்கிண்ணத்தில் மணம் வீசும் தேனும் நிறையப் பெய்து தந்து, பாம்பு உரித்த சட்டை போன்ற பூ வேலைப்பாடுகள் செய்த உயர்ந்த உடைகளையும் அணி மணிகளையும் என்னுடைய வறுமைத் துயரமென்னும் கொடிய வெப்பக் கொடுமை தீரப்பெய்யும் மழை போல் தருபவன் என்று கிள்ளிவளவனின் உணவுக் கலாச்சாரம் குறித்துப் பேசுகிறார்.*

***நெடுங்கடைத் தோன்றி யோனே அதுநயந்து***
***உள்ளி வந்த பரிசிலன் இவன் என***
***நெய் உறப் பொறித்த குய்யுடை நெடுஞ்சூடு***
***மணிக்கலன் நிறைந்த மண நாறு தேறல்***
***பாம்பு உரித் தன்ன வான்பூங் கலிங்கமொடு***
***மாரி யன்ன வண்மையின் சொரிந்து*** ***(புறம். பாடல் : 397)***

*கொடை கொடுப்பவர்கள் தன்னிடம் உள்ள உயர்ந்த பொருள்களையே தானமாகக் கொடுக்க வேண்டும் என்கிறது சீறாப்புராணம். அக் கருத்து சங்க செவ்வியல் இலக்கியத்திலிருந்து*

*எடுத்தாண்டு இருக்கலாம் என்பது கிள்ளிவளவனின் கொடைப் பண்பு பறை சாற்றுகிறது. உணவில் சிறந்தவைகளான நெய், தேன், சூடான உணவு, புதிய நல்ல மற்றும் உயர்வான ஆடைகளையும் மழைபோல் கொடுக்கும் கொடையாளன் என்றும் உணவு கொடுப்பதிலும் உயர்ந்த உணவுகளைத் தருவதும் உணவுப் பண்பாடாக உணர முடிகின்றது.*

**பசியார உணவளித்தோன் பல்லாண்டு வாழ்க!**

*சேரமான் வஞ்சனைத் திருத்தாமனார் புகழ்ந்து பாடுகிறார். எனது தடாரிப் பறையை ஒலிக்க, என் வரவறிந்த அவன், எனது இடையில் உடுத்தியிருந்த நார் நாராகக் கிழிந்திருந்த கந்தலுடையை நீக்கச் செய்து தான் உடுத்தியிருந்த புகை போன்ற மெல்லிய புதிய ஆடையை உடு க்கச் செய்து நெருப்பில் காய்ந்தது போல் இருந்த என் உண் கலத்தில் உண்பவர் நிழல் தெரியும் தெளிந்த கள்ளினைக் கொடுத்து மான் இறைச்சியையும் பொரிக் கறியையும் முனை முறியாத நெல்லரிசிச் சோற்றையும் கொடுத்தான். அதோடு இல்லாமல் பலமணிகள் கோத்த பாம்பு போல் வளைந்த மாலையும் பூவேலைப்பாடமைந்த பொன்னாடையையும் கொடுத்தான் என்கிறார்.*

***அழல் கான் றன்ன அரும்பெறல் மண்டை***
***நிழல் காண் தேறல் நிறைய வாக்கி***
***யான் உண அருளல் அன்றியும் தான் உண்***
***மண்டைய கண்ட மான்வறைக் கருனை***
***கொக்கு உகிர் நிமரல் ஒக்கல் ஆர*** ***(புறம். பாடல் : 398)***

*கந்தலான ஆடையைக் களைந்து நல்ல ஆடை உடுத்தக் கொடுத்து நடந்து வந்த களைப்பு தீர கள் குடிக்கக் கொடுத்து சுவையான உணவும் கொடுத்து பசியாற்றும் பண்பாளன் சேரமான் வஞ்சனன் என்று திருத்தாமனார் மன்னனின் உணவுக் கலாச் சாரத்தைக் குறிப்பிடுகிறார்.*

**வேண்டும் என்று கேட்காமலே விரும்பியதைத் தருவான்**

*ஐயூர்முடவனார் என்ற புலவர் தோன்றிமலைத் தலைவனாகிய தாமனிடம் காணும் உணவுக் கலாச்சாரம் குறித்துப் பேசுகிறார்.*

*அளந்தெடுக்காமல் அள்ளிக் கொண்டு வந்த வெண் நெல்லை உலக்கையால் குத்தி புளித்த நீர் ஆகாரத்தை உலையிலிட்டு மாமரத்தின் சுவையான பழங்களைப் பிசைந்து செய்த சுவையான புளிக் குழம்பும் வாரல் மீன் இறைச்சியும் சுறாமீன் துண்டங்களும் வள்ளைக் கீரையும் பாகற்காயும் மூடி வைத்துச் சமைத்த சோற்றையும் தருவான் கிள்ளிவளவன்.*

***அடுமகள் முகந்த அளவா வெண்நெல்***
***தொடிமாண் உலக்கைப் பருஉக்குற் றரிசி***
***காடி வெள்உலைக் கொளீஇ நீழல்***
***ஓங்கு சினை மாவின் தீங்கனி நறும்புளி***
***மோட்டுஇரு வராஅல் கோட்டுமீன் கொழுங்குறை***
***செறுவின் வள்ளை சிறுகொடிப் பாகல்*** ***(புறம். பாடல் : 399)***

*நமது பண்டையத் தமிழர்களின் உணவுக் கலாச்சாரம் தோண்டத் தோண்ட புதிதாய் சுரக்கும் நீர் போல் பல்வேறு உணவுப் பண்பாட்டை அறிய முடிகிறது. வெண் நெல் பயன்பாடு உலக்கை கொண்டு நெல்லைக் குத்திப் பயன்படுத்துதல் மற்றும் மாமரத்தின் பழம் கொண்டு செய்யும் புளிக்குழம்பு மீனையும் கீரையையும் உணவாக உண்டமை மட்டுமல்லாமல் தன்னை நாடி வரும் இரவலருக்குச் சுவையான உணவுகளைக் கொடுத்துப் பசியாற்றியமை ஆகியன நம் முன்னோர்களின் உணவுக் கலாச்சாரமாக இருந்துள்ளதைப் புலவர் இப்பாடல் வழி உணர்த்துகிறார்.*

**பசிப்பகை போக்கிய பண்பாளன்**

*சோழன் நலங்கிள்ளியைப் பசிப்பகை போக்கிய பண்பாளன் என்று கோவூர்க் கிழார் என்னும் புலவர் புகழ்ந்து பாடுகிறார். தடாரிப் பறையின் ஒலி கேட்டு உலகைக் காப்பதையே தன் உயர்ந்த இலட்சியமாகக் கொண்ட மன்னன் நான் கட்டியிருந்த பழைய கந்தல் ஆடையை நீக்கச் செய்து புத்தாடை தந்து உடுக்கச் செய்தான். பல உயர்ந்த அணிகலன்களையும் கொடுத்ததுடன் பனை நார் கொண்டு வடிகட்டித் தூசு நீக்கிய சுவையான கள்ளை உண்டு நாள்தோறும் மகிழ்ந்திருந்தேன். சோழன் நலங்கிள்ளி என்னும் மன்னன் தன்னை எதிர்ப்பவர் பகையை மட்டுமல்லாது தன்னைத் தேடி வந்தவர்களின் பசிப்பகையையும் போக்கியவன் என்று கோவூர்க் கிழார் பாடுகிறார்.*

***கலிங்கம் அளித்திட்டு என் அரை நோக்கி***
***நார்அரி நறவின் நாள்மகிழ் தூங்குந்து***
***போது அறியேன் பழகவும்***
***தன்பகை கடிதல் அன்றியும் சேர்ந்தோர்***
***பசிப்பகை கடிதலும் வல்லன் மாதோ*** ***(புறம். பாடல் : 400)***

*புத்தாடையும் அணிகலன்களும் களைப்பு நீக்கும் மதுவும் நல்ல உணவும் ஒரு நாள் மட்டுமல்லாது பல நாள்கள் கொடுத்தான். இவ்வாறாக நான், அவன் ஊரில் எவ்வளவு நாள் மகிழ்ந்திருந்தேன் என்பது எனக்கே தெரியாது என்று சோழன் நலங்கிள்ளியின் கொடைப் பண்பு குறித்துக் பாடுகிறார் புலவர் கோவூர்க் கிழார்.*

**அறிவை அழிக்கும் பசித் துயரைப் போக்கியவன்**

*சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை நல்லிறையனார் பாடுகிறார். இல்லையென்று வருபவர்க்கு இல்லையென்று கொடுக்கும் வள்ளல் குணமுடையவர்கள் இருக்கின்றார்களா என்று நான் தேடி அலைந்தேன். அப்போது செல்வ வளமெல்லாம் ஒருங்கப் பெற்ற ஒருவன் இருப்பதை அறிந்தேன். சோற்றிலே கை வைப்பதை மறந்து பல நாளான என் சு ற்றத்தாரது பசித் துன்பம் தீர கொழுத்த இறைச்சித் துண்டையும் வெண்மையான ஊன் உணவை உண்ணச் செய்தான். முட்டையிடும் பாம்பின் நாக்கைப் போன்ற நைந்து கிழிந்து அழுக்கேறிக் கிடந்த என் ஆடையை நீக்கினான். தூய வெள்ளை ஆடையை உடுக்கச் செய்து என்னையும் என் சுற்றத்தாரையும் காத்தவன் கிள்ளிவளவன் என்று கிள்ளிவளவனின் உணவுப் பண்பாடு குறித்துப் பாடுகிறார்.*

***வள்ளன் மையின்எம் வரைவோர் யார்என***
***வள்ளிய உள்ளமொடு உலைநசை துணையா***
***உலகம் எல்லாம் ஒருபால் பட்டென***

*மலர்தார் அண்ணல்நின் நல்லிசை உள்ளி*
*ஈர்ங்கை மறந்தஎன் இரும்பேர் ஒக்கல்,* *(புறம். பாடல் : 393)*

*தன்னை நாடி வருபவர்களுக்கு நல்ல தூய உடையும் நல்ல உணவும் கொடுத்துப் பசிப்பிணியைப் போக்கும் வள்ளல் தன்மை நிரம்பப் பெற்றவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று பாடுகிறார்.*

**முடிவுரை**

*உலகம் மகிழ பல நற்கருத்துக்களையெல்லாம் தன்னகத்தே கொண்டுள்ள செவ்வியல் இலக்கியங்களான; சங்கஇலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் வீரம் மட்டுமே பேசப் படவில்லை. கூடுதலாக உணவுக் கலாச்சாரம் என்னும் உயரிய உணவுப் பண்பாடு குறித்தும் பார்க்க முடிகிறது. செல்வம் பெற்றதன் பயனே இல்லாராகிய வறியவர்க்கு கொடுத்து அவர்களின் பசித்துன்பம் போக்குவதே ஆகும். உலகத்து உயிர்கள் வாழ உணவு என்பது உயிர் காக்கும் உன்னத மருந்து ஆகும். ஈதல் இசைபட வாழ்தல் என்றும், ஈத்துவக்கும் இன்பம், என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். அப்பண்பு புறநானூற்றிலும் காணக் கிடைக்கிறது.*

*செல்வத்துப் பயனே ஈதல்*
*துய்ப்பேம் எனினே தப்புந பலவே* *(புறம். பாடல் : 189)*

*அரசன் ஆனாலும் ஆண்டியானாலும் எல்லோர்க்கும் உணவும் உடையும் தேவை. தான் தேடிய செல்வம் எல்லாம் தனக்கு என்று எண்ணாமல் பிறருக்கும் கொடுத்து தானும் மகிழ்ந்து பெற்றவரும் மகிழ்ந்து வாழ்ந்திருப்பதே வாழ்க்கையின் பயன் எனப் பொருளுரைக்கிறது. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் என்ற ஔவையின் நல்வழி கூறும் கருத்தும் வறியவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்து அவர்களின் பசிப்பிணி போக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றன.*

*மன்னனையும் வள்ளல்களையும் பாடும் புலவர்கள் மற்றும் பாணர்கள் வழி அவர்களின் வள்ளல் தன்மையை அறிய முடிகின்றது. "அவனை அவர் பாடியது" என்னும் கூற்றிலிருந்து புலவர்கள் சங்க காலத்தில் எத்தகைய செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தனர் என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது. புறநானூற்றுப் பாடல்கள் உணவுக் கலாச்சாரம் குறித்துப் பேசும் போது, உணவுக்காக மன்னர்களையும் வள்ளல்களையும் தேடிச் செல்லும் புலவர்களுக்கும் வறியவர்களுக்கம் உணவு மட்டுமின்றி உடையும் கொடுத்தனர். ஒரு நாள் மட்டும் இன்றி பல நாள்கள் தன்னோடு இருக்கச் செய்து உணவு கொடுத்து அவர்களின் வாழ்விற்குத் தேவையான ஏராளமான பொருளைக் கொடுத்து வழியனுப்பி வைக்கின்றனர். மன்னர்கள் மற்றும் வள்ளல்களின் கொடைப்பண்பும் உணவுப் பண்பாடும் இதுவென்றால் பரிசில் பெற்ற புலவர்கள் பரிசுகளைக் கொண்டு போய் தன் மனைவியிடம் கொடுத்து நமக்கு பிற்காலத்துக்கு வேண்டும் என்று சேர்த்து வைக்கவில்லை. இத்தகைய உயரிய உணவுக் கலாச்சாரம் இருந்ததைப் புறநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகின்றது. மனித வாழ்வின் அடிப்படையே உணவும் உடையும் தான் என்பதை அறிந்த நம் முன்னோர்கள் உணவுக் கலாச்சாரம் குறித்துப் பாடுவதைக் காண முடிகின்றது.*

**துணை நூற்பட்டியல்**

1. மு. கோவிந்தராசன், புறநானூற்றுப் புதையல், திருமலைக்குமரன் பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை, 2007
2. ஞா. மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை, 2003
3. ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைக் களஞ்சியம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பதிப்புத்துறை, முதல் பதிப்பு, மதுரை, 1996
4. சாமி. சிதம்பரனார், எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும், அறிவுப் பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை, 2008
5. கு.வெ. பாலசுப்பிரமணியன்(உ.ஆ), புறநானூறு(மூலமும் உரையும்), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், சென்னை, ஆறாம் பதிப்பு, 2017
6. சிற்பி பாலசுப்பிரமணியன், நீலபத்மநாபன், புதிய தமிழ்சுஇலக்கிய வரலாறு சாகித்ய அகாடமி பதிப்பகம், சென்னை முதல்பதிப்பு, 2014, தொகுதி – ஐ
7. பாக்யமேரி, வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், சென்னை, முதல் பதிப்பு, 2008

**References**

1. *Govindarasan, M., Purananoorthu Puthayal, Thirumalaikumaran Publishing House, 1st edition, Chennai, 2007.*
2. *Manickavasagar, G., Purananooru Moolamum Uriyaiyum, Uma Publications, 1st edition, Chennai, 2003.*
3. *Dandapani Desikar, S., Thirukkural Vurai Kalanjiyam, Madurai Kamaraj University, Department of Publications, 1st Edition, Madurai, 1996.*
4. *Saamy. Chidambaranar, Ettu Thogaiyum Tamilar Panpadum, Arivu Publications, 1st edition, Chennai, 2008.*
5. *Balasubramanian, K.V., Purananooru Moolamum Uraiyum, New Century Book House (P)Ltd., Chennai, 6th Edition, 2017.*
6. *Sculptor Balasubramanian, Neelapadmanabhan, Puthiya Tamil Ilakiya Varalaru, Sahitya Akademi Publishing House, Chennai First Edition, 2014, Volume – I.*
7. *Bhagyameri, Vagamai Nokkil Tamil Ilakiya Varalaru, New Century Book House(P) Ltd., Chennai, 1st Edition, 2008.*